மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

OS.No.5/2020

2024–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிராசியஸ்(Dw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

நாள்.14.08.2024

பி.வா.சா.1

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள விபரம் எனக்கு தெரியும்.

எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1. 24.12.1998 தேதியில் 2ம்பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த சம்மத வாக்குமூலம் ஆவணம் (பதிவு செய்யாதததால் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது) பி.வா.சா.ஆ.1 ஆகும்.

2. 10.05.1999ம் தேதி 1ம் பிரதிவாதி 10 சென்டை ராஜன் என்பவரிடம் அடமானம் வைத்து அடமான சான்று நகல் பி.வா.சா.ஆ.2 ஆகும்.

3. 13.03.2000 தேதியில் தாவா சொத்தை ராஜன் என்பவரிடம் இருந்து திருப்பியதற்கான செல்லடித்த ரசீது அசல் பி.வா.சா.ஆ.3 ஆகும்.

4. 12.01.1999ம் தேதி தாவா சொத்தை பொறுத்து 1ம்பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதி அசல் பி.வா.சா.ஆ.4 ஆகும்.

5. சர்வே எண்.66/1c, 66/2c சம்மந்தமாக பரலோதமைக்கு அனுப்பப்பட்ட சர்வே நோட்டீஸ் பி.வா.சா.ஆ.5 ஆகும்.

6. 04.02.2019 ம் தேதியில் தாவா சொத்தை பொறுத்து SLR தலைமை உதவியாளரின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.6 ஆகும்.

7. 1, 2 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட பட்டா கணினி நகல் பி.வா.சா.ஆ 7 ஆகும்.

8. 8 ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டா கணினி நகல் பி.வா.சா.ஆ 8 ஆகும்.

9. எனது பெயர் மற்றும் செளந்திரராஜன் பெயரில் உள்ள சொத்து வரி ரசீது அசல் (எண்ணம்–3) பி.வா.சா.ஆ 9 ஆகும்.

10. தாவா சொத்திற்கான மின் கட்டண ரசீது அசல் (எண்ணம்–4) பி.வா.சா.ஆ 10 ஆகும்.

11.வில்லங்க சான்றிதழ் கணினி நகல் பி.வா.சா.ஆ 11 ஆகும்.

பிராது தள்ளுபடி செய்ய வேண்டி கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.